இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சகோதரர் சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள். (கொலோ 3:1-4)

# இளைஞர்கள், நம்பிக்கையின் சாட்சிகளாக வாழ அழைப்பு

## திருத்தந்தை

**வத்திக்கான்**: உலக இளைஞர் தினத்திற்கான சிலுவையை வழங்கும் முக்கியமான நிகழ்வு, வருகிற நவம்பர் 22ம் தேதி, கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று இடம்பெறும் - திருத்தந்தை பிரான்சிஸ்

ஏப்ரல் 05, ஞாயிறன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றிய குருத்து ஞாயிறு திருப்பலியின் இறுதியில் ஆற்றிய மூவேளை செப உரையில், சமுதாய தொடர்பு சாதனங்கள் வழியாக, இத்திருப்பலியில் பங்குகொண்ட அனைத்து விசுவாசிகளையும் வாழ்த்தினார்.

மறைமாவட்ட இளைஞர் நாளில், இதுவரை இடம்பெறாத அளவில், இன்று உலகெங்கும் பங்குகொள்ளும் இளைஞர்களை, இன்று சிறப்பாக நினைத்துப் பார்க்கின்றேன் என்றும் திருத்தந்தை கூறினார்.

2019ம் ஆண்டில் உலக இளைஞர் நாள் சிறப்பிக்கப்பட்ட பானமா நாட்டு இளைஞர்கள், 2022ம் ஆண்டில் இந்த உலக நாள் சிறப்பிக்கப்படவுள்ள லிஸ்பன் நகர் இளைஞர்களுக்கு, ஏப்ரல் 05, ஞாயிறன்று, உலக இளைஞர் நாள் சிலுவையை வழங்க வேண்டியிருந்தது, இந்த முக்கியமான நிகழ்வு, வருகிற நவம்பர் 22ம் தேதி, கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று இடம்பெறும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்தார்.

இந்த நிகழ்வுக்காகக் காத்திருக்கும் இவ்வேளையில், இளைஞர்கள் அனைவரும், கொரோனா தொற்றுக் கிருமியின் இந்த இன்னலான நேரத்தில், நம் எல்லாருக்கும் தேவைப்படும், நம்பிக்கை, மனத்தாராளம், தோழமை ஆகியவற்றை உருவாக்கவும், அவற்றுக்குச் சான்றுகளாக வாழவும் வேண்டுமென திருத்தந்தை வலியுறுத்தினார்.


குருத்து ஞாயிறு திருப்பலியின் போது திருத்தந்தை

### வளர்ச்சி மற்றும் அமைதிக்காக விளை யாட்டு உலக நாள்

வளர்ச்சி மற்றும் அமைதிக்காக விளையாட்டு உலக நாள், ஏப்ரல் 06, கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்நாள்களில், பல விளையாட்டு நிகழ்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன, இருந்தபோதிலும், எதிர்ப்பு உணர்வு, குழு உணர்வு, உடன்பிறந்த உணர்வு போன்ற விளையாட்டின் சிறந்த கனிகளை நம்மால் காண முடிகின்றது, எனவே, இந்த உலக நாளை மீண்டும் துவக்குவோம் என்று திருத்தந்தை கூறினார்.

இயேசு துன்புற்று, மரித்து, உயிர்த்ததை நினைவுகூரும் புனித வாரப் பயணத்தை, நம்பிக்கையில் மேற்கொள்ளுமாறு விசுவாசிகளைக் கேட்டுக்கொண்ட திருத்தந்தை, திருவழிபாடுகளில் பங்குகொள்ள இயலாதவர்கள், வீடுகளில் தொழில்நுட்பக் கருவிகளின் உதவியுடன் செபத்தில் ஒன்றுகூடுமாறு கூறினார்.

கோவிட்-19 கிருமி நோயாளிகள், அவர்களின் குடும்பங்கள் மற்றும், அவர்களுக்காக தங்களையே தியாகம் செய்யும் அனைவரோடும், ஆன்மீக முறையில் மிக நெருக்கமாக ஒன்றித்திருப்போம், அவர்கள் ஒவ்வொருவரும் என் மனதிலும், நினைவிலும் இருக்கின்றனர் என்றுரைத்த திருத்தந்தை, பாஸ்கா விசுவாச ஒளியில் இறந்தவர்களுக்காகச் செபிப்போம் என்றும் கூறினார்.

இறுதியில், உயிர்ப்பின் மகிமைக்கு நம்மை இட்டுச் செல்லும், சிலுவையின் பாதையில் இயேசுவைப் பின்செல்ல அன்னை மரியாவிடம் செபிப்போம் என்று கூறி, மூவேளை செப உரையை திருத்தந்தை நிறைவு செய்தார்.

### துன்புறுவோருடன் இணைந்திருக்கும் திருத்தந்தை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் ஒவ்வொருநாள் காலையிலும் 7 மணிக்கு நிறைவேற்றும் திருப்பலிகளில், வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டு தன் திருப்பலியைத் துவக்குகிறார்.

அவரவர் இல்லங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு மக்கள் உள்ளாகியிருக்கும் சூழலில், அவர்களை ஒன்றிணைக்க உதவிவரும் ஊடகப் பணியாளர்களுக்கு, குறிப்பாக, இந்நாள்களில் வீடுகளிலேயே தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ள ஊடகப் பணியாளர்களுக்கு செபிப்போம் என்று, கடந்த புதன் திருப்பலியின் துவக்கத்தில் திருத்தந்தை குறிப்பிட்டார்.

# இறப்பின் கற்களை அகற்றுமாறு இறைவன் கேட்கிறார்

**வத்திக்கான்**: நம் இதயத்திலிருக்கும் கற்களை அகற்றி, புதிய வாழ்வுக்கு நம்மைத் திருப்புவோம் என்ற அழைப்பை முன்வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மனிதரின் விசுவாசமும், இறையன்பின் வரையற்ற வல்லமையும் ஒன்றையொன்று தேடிக்கொண்டிருக்கின்றன, இறுதியில் அவை சந்திக்கின்றன என்பதை காண்கின்றோம் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், துன்பவேளைகளில் நம் விசுவாசத்தை தொடர்ந்து பாதுகாத்து வைத்திருப்போம் என அழைப்பு விடுத்தார்.அன்று கல்லறைக் கல்லை அகற்றச் சொன்ன இயேசு, இன்றும் நம்மைப் பார்த்து, நம் இதயத்திலிருந்து கற்களை அகற்றச் சொல்கிறார் என எடுத்துரைத்தார் திருத்தந்தை.

ஏழைகளை ஒடுக்குதல், வெளிவேடத்தைக் கொண்ட விசுவாச வாழ்வு போன்ற

இறப்பின் கற்களை அகற்றுமாறு இறைவன் நம்மை கேட்கிறார் என்ற அழைப்பை முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவ்வாறு நிகழும்போது நம்மைச் சுற்றியிருப்பவைகள் அனைத்தும் புதுப் பொலிவுடன் விளங்கும் எனவும் கூறினார்.

இறைவனே வாழ்வு என்பதையும், அவரே வாழ்வை வழங்குகிறார் என்பதையும் நேரடியாகக் காண்கிறோம் என்றார்

திருத்தந்தை பிரான்சிஸ்.இயேசு இலாசரை உயிர்ப்பித்த நிகழ்வு குறித்த நற்செய்தி வாசகத்தை முன்வைத்து, ஞாயிறு மூவேளை செப உரையை தன் நூலக அறையிலிருந்து வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரணம் இருக்கும் இடங்களிலெல்லாம் வார்த்தையாம் இறைவன் வாழ்வை வழங்கட்டும் என்றார் தொடர்ந்து கூறினார்.

# வத்திக்கான் நாட்டுக்கொடி அரைக்கம்பத்தில்...

வத்திக்கான்: இத்தாலியிலும், உலகெங்கும் கொரோனா தொற்றுக்கிருமியின் தாக்கத்தால் பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோருடன் ஒருமைப்பாட்டை வெளியிட்டு, மார்ச் 31, முதல், வத்திக்கான் நாட்டின் கொடி, அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோயினால் இறந்தோரின் நினைவாக, இத்தாலியின் அனைத்து நகரங்களிலும் இத்தாலிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று, இந்நாட்டின் அனைத்து நகர மேயர்களும் இணைந்து மார்ச் 31ம் தேதி எடுத்த முடிவையடுத்து, வத்திக்கான் நாடும் இந்த முடிவை ஏற்று செயல்பட்டது என்று, வத்திக்கான் செய்தித்துறையின் அறிக்கை கூறுகிறது.

இத்தாலியிலும், உலகெங்கும் இறந்தோர், அவர்களின் குடும்பத்தினர், இந்த நோயை முடிவுக்குக் கொணர போராடிவருவோர்



ஆகிய அனைவருக்கும் மரியாதை செலுத்தும்வண்ணம் வத்திக்கான் கொடி அனைத்து கட்டடங்களிலும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன என்று வத்திக்கான் செய்தித்துறையின் அறிக்கை கூறுகிறது.

# 'ஈஸ்டர் மக்களாக ஒன்றித்து வாழ்வோம்' -ஆயர் கொர்னிலியூஸ் வாழ்த்துச் செய்தி

பாஸ்கா பெருவிழா வழக்கமாக வந்து போகும் கொண்டாட்டமாக மட்டுமே கருதப்படக்கூடாது, ஏனென்றால் மரித் தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை நாம் கொண் டாடுகிறோம், அவர் உலக முடிவுவரை நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அல்லேலூயா (மத் 28:20).

நோன்பின் ஆரம்பத்தில், மனந்திரும்பு வதற்கான நமது விருப்பத்தின் வெளிப் பாடாக திருநீற்றைப் பெற்றுள்ளோம், இதன்வழி கடவுளுடனான அன்பான உறவினால் மட்டுமே, அவருடன், நமக்கும் அவருடைய இயற்கையான படைப்பிற்கும் இடையே இணக்கமாக வாழ நம்மால் முடியும் என்பதை ஒப்புக்கொள்கிறோம்.

"சுயநலமாக இல்லாமல், ஒவ்வொரு நாளும் நம் சிலுவையைச் சுமந்து, அவரைப் பின்பற்றுவதன் மூலமே" அவரைப் பின் செல்ல முடியும் என்று இயேசு கோரிய விசுவாச பயணத்தின் அனுபவம் எளிதானது அல்ல (லூக்கா 9:23).

பல முறை, நம்முடைய சுயநல மனப்பான் மையின் காரணமாக, கடவுளுக்கும், நமக்கிடையே ஒருவருக்கொருவர் மற்றும் கடவுளின் படைப்புக்குமாகிய நம்முடைய பொறுப்பை புறக்கணித்துள்ளோம்.

நாம் கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், ஏனென்றால் நோன்பின் காலம் முழுவதும், அவருடைய வார்த்தை மற்றும் சடங்குகள் மூலம், ஆண்டவர் நமக்கு உதவினார், அவருடைய பிள்ளை களாகிய நம்முடைய உறுதிப்பாட்டை நினைவுபடுத்தினார். ஈஸ்டர் (பாஸ்கா) என்பது நம்முடைய அழைப்புகள் மற்றும் ஊழியங்கள் அனைத்திலும் இயேசுவுக்கு நம்முடைய ஒற்றுமையையும் விசுவாசத் தையும் புதுப்பிக்கவும் உறுதிப்படுத்தவும் ஒரு வாய்ப்பாகும்.



அவருடைய பிள்ளைகளாக, ண்டவரின் இரக்கத்திற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். தவக்காலமானது, இயேசு வோடான நல்லிணக்கத்திற்கு நம்மை "ர்ப்பணிக்கத் வாய்ப்புக்களை முன்வைத்து. டுறைவேண்டல்கள், நோன்பு மற்றும் தர்ம செயல்கள் மூலம் இயேசுவை எதிர் கொண்டது அவருடைய மகிழ்ச்சியில் வாழ வழிவகுத்தது.

நம்முடன் இருக்கும் ஆண்டவராகிய இயேசு, கோவிட் -19 வைரஸைப் பற்றி நாம் பயப்படுகையில், நம் நாட்டின் அரசியல் சூழ்நிலையால் பேரழிவிற்குள் ளாகும் வேளையில், நம் மத்தியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் மற்றும் ஆபாசப் படங்கள் போன்ற குற்றங்களின் விளைவுகள் குறித்து கவலைப்படுகையில் அவர், நம் வாழ்க்கையைப் பற்றி அக்கறை கொள்கிறார்.

ஈஸ்டர் கொண்டாடுவது என்பது உயிருள்ள இயேசுவின் உடனிருப்பில் அவரது அதிகாரம் மற்றும் ஊக்கமளிக்கும் வாழ்க்கை முறையைத் தொடர விரும்புகி றோம் என்தாகும். அவர் நமது தனிப்பட்ட நல்வாழ்வு, நமது குடும்பங்கள் மற்றும் நமது சமூதாயத்தில் பங்கேற்கிறார். நாம் நம்புகிற இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர். (எபி 13: 8).

ஆனால் ஈஸ்டர் மகிழ்ச்சியால் ஊக்கம் பெற்ற மற்றும் ஊக்குவிக்கப்பட்ட வாழ்க்கை என்பது, தந்தையாகிய கடவு ளிடம், அவருடைய சீடர்களாகிய நமக் காக, கடைசி இராவுணவுக்கு முன்னதாக இயேசு செய்த இறைவேண்டலில் நாம் உறுதியாக இணைய வேண்டும் (யோவா17: 11-19).

இயேசுவுடனான நமது ஒன்றிப்பு நம் குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் சமூகத்தின் ஒற்றுமை உணர்வை வளர்க்க உதவுகிறது. நாம் தினமும் கேட்கும் மற்றும் தியானிக்கும் ஆண்டவருடைய வார்த்தை அவரது ஒளியில் வாழ நமக்கு உதவும் (யோவா 8:12).

தூய ஆவியின் வழிகாட்டுதலுடன் நாம் எப்போதும் ஒரே உள்ளமும் ஒரே உயிரு மாய் வாழலாம். (திப 4:32). எந்தவொரு இடையூறு இருந்தாலும் இயேசுவின் போதனையை நம்பிக்கையுடனும் விடாமுயற் சியுடனும் பின்பற்றுவோம். உயிருள்ள கிறிஸ்துவின் மீதான நம்முடைய நம்பிக்கை தான் கடவுளுக்கு எப்போதும் முதலிடம் அளிக்கும் ஒரு சமூகமாக வாழ நமக்கு உதவுகிறது, நம்முடைய சக மனிதர்களின் நலனை நோக்கியும், கடவுளின் படைப்பின் தன்மையை நேசிப்பதாகவும் இருக்கிறது.

பாஸ்கா உணர்வுவோடு திருஅவையின் உறுப்பினர்களாக, ஈஸ்டர் மக்களாக வாழ ஒருவருக்கொருவர் உதவுவோம். நம் முடைய கிறிஸ்தவ அடையாளத்தைப் பற்றி எப்போதும் பெருமிதம் கொள்வோம். (யோவா 13:35), நமது மறைத்தூதுப் பணி யில் (மத் 15: 13-16) உறுதியுடன், தமது இலக்கை நோக்கிப் பயணிப்போம் (யோவா 14; 6)

அனைவருக்கும் ஈஸ்டர் வாழ்த்துகள்.

*ஆயர் மேதகு டத்தோ கொர்னிலியுஸ் பியோங்*
*ஆயர், கெனிங்காவ் மறைமாவட்டம்.*

# எல்லாவற்றிற்கும் ஒரு விடியல் உண்டு

எந்த ஒரு நிகழ்வும் குறைந்தது ஒரு பாடத்தையாவது கற்றுக் கொடுக்கிறது. கோவிட்-19 கிருமி நெருக்கடி முதலில் மக்களில் மனிதாபிமானத்தை வளர்த் துள்ளது.

தொற்றுலிருந்து தற்காத்துக் கொள்ள, அடிக்கடி கைகளை சோப்பு போட்டு நன்றாக கழுவ வேண்டும் என்பது முதல் அறிவுரையாக நம் அனைவருக்கும் சொல்லப்பட்டுள்ளது.

அடுத்து, கோவிட்-19 தொற்றுக்கிருமி, எந்த ஒரு தாக்குதலுக்கும் உடனடியாகவும், அதே நேரம் மிகுந்த சிரத்தையுடனும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மருத்துவப் பரிசோதனைகளை செய்து கொள்ள வேண்டும் போன்ற படிப்பினைகளையும் கற்றுத்தந்துள்ளது. மக்கள் வீடுகளிலே இருப்பதால் சுற்றுச்சூழல் மாசடைவது குறைந்துள்ளது. கால்வாய்களில் தண்ணீர் தூய்மையடைந்துள்ளது. மனிதரிடையே பாசமும், மனிதாபிமானமும் வளர்ந்துள்ளன. குடும்பங்களில் உறவுகள் உறுதியடைந்து வருகின்றன. பிள்ளைகள் பெற்றோருடன் அதிக நேரம் செலவழிக்கின்றனர். இறை யுணர்வு அதிகமாகியுள்ளது .

இந்த அறிவியல், தொழில்நுட்ப யுகத்தில், கடவுளுக்கே சவால் விட்ட மனிதருக்கு, ஒரு கிருமி, அதுவும் கண்ணுக்குத் தெரியாத ஒரேயொரு கிருமி பல பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது. மனிதர் இவ்வேளையில், படைப்புகளுக்கு எதிராக இழைத்த தவறுகளை நினைத்து வருந்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மனிதருக்கு மட்டுமல்ல, எல்லா உயிரினங்களுக்கும் உரிய இந்தப் பூமியை, கடவுள் மனிதருக்கு வாடகைக்கு விட்டுள்ளார். இந்தப் படைப்பை உறிஞ்சி துன்புறுத்த அல்ல, பேராசையைத் தவிர்த்து அதை அளவோடு பயன்படுத்தவும் அவர் அனுமதியளித்துள் ளார். எனவே இந்தப் பூமியின் முதலாளிக்கு



வாடகைத் தொகையை முறையாகச் செலுத்தி, நாம் விசுவாச மாகவும், நன்றியுணர்வோடும் வாழ வேண்டும். நம்முடன் வாழும் மனிதர்களை மட்டுமல்ல, நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாத்து, அது வருங்காலத் தலைமுறைகள் வாழ்வதற்கு ஏற்ற இல்லமாக விட்டுச் செல்வது நமது கடமையாகும்.

இதுவும் கடந்துபோகும். இந்நாள்களில் உலகில் ஏறத்தாழ எல்லா நாடுகளுமே கட்டாய சுய ஊரடங்கு முறையை நடைமுறைப்படுத்தியுள்ளன. அத்தியாவசியத் தேவைகளின்றி மக்கள் எவரும் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம், இதனால் நீங்கள் மட்டுமல்ல, உங்களைச் சுற்றியுள்ள மற்றவரும் காப்பாற்றப்படுவார்கள் என்று நாடுகள் அறிவுறுத்தி வருகின்றன.

## கோவிட் 19 - புனித வெள்ளியன்று சிறப்பு மன்றாட்டு

இவ்வாண்டு ஏப்ரல் 10ம் தேதி, புனித வெள்ளியன்று நடைபெறும் வழிபாட்டில், எழுப்பப்படும் சிறப்பு மன்றாட்டுக்களில், உலகெங்கும் பரவியுள்ள கோவிட் 19 தொற்றுக்கிருமி நெருக்கடியையொட்டி ஒரு சிறப்பு மன்றாட்டை, திருவழிபாட்டு பேராயம் உருவாக்கியுள்ளது.

இந்த தொற்றுநோயை முடிவுக்குக் கொணர இறைவனிடம் மன்றாடும் ஒரு சிறப்புக் கருத்து திருப்பலியை திருவழி பாட்டுப் பேராயம் பரிந்துரைத்துள்ளதோடு, இந்த திருப்பலியின் துவக்கத்தில் சொல்லப்படும் சபை மன்றாட்டை இப்பேரா யம், பின்வருமாறு வடிவமைத்துள்ளது:

**"என்றென்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, எங்கள் நெருக்கடிகளிலும், ஆபத்துக்களிலும் எங்கள் தஞ்சமாய் இருப்பவரே, நம்பிக்கையுடன் உம்மிடம் வேண்டுகிறோம், நோயினால் தாக்கப் பட்டோரை கருணையுடன் நோக்குவீராக, இறந்தோருக்கு முடிவில்லா அமைதி வழங்குவீராக, அழுது புலம்புவோருக்கு ஆறுதலும், நோயுற்றோருக்கு நலமும், இறக்கும் நிலையில் இருப்போருக்கு அமைதியும், நலப்பணியாளர்களுக்கு சக்தியும், எங்கள் தலைவர்களுக்கு ஞானமும், அனைவருக்கும் அன்புடன் உதவி செய்யும் துணிவும் வழங்கியருளும். இவற்றின் விளைவாக, நாங்கள் உமது புனித பெயருக்கு மகிமை தருவோமாக."**

திருவழிபாட்டு பேராயம் வெளியிட்ட இந்த மன்றாட்டுக்கள் அடங்கிய அறிக்கை, உலகெங்கிலும் உள்ள ஆயர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 40 நாட்களாக தபம், செபம், ஒறுத்தல் காரியங்களை மேற்கொண்ட நாம், இன்று அதன் அறுவடையாக இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் வெற்றிநாளை அகமகிழ்வுடன் கொண்டாடுகிறோம்.

ஆம், இன்றைய முதல் வாசகத்தில் பேதுரு வின் உரை இயேசு கிறிஸ்துவைப் பற்றிய உன்னதமான சான்றாக அமைகிறது. "மக்கள் அவரைச் சிலுவையில் தொங்க வைத்து கொன்றார்கள். ஆனால் கடவுள் அவரை மூன்றாம் நாள் அவரை உயிரோடு எழுப்பிக் காட்சி அளிக்கச் செய்தார். ஆயினும் அனைத்து மக்களுக்கும் அல்ல, சாட்சிகளாக கடவுள் முன் தேர்ந்துகொள்ளப்பட்டவர் களுக்கு மட்டுமே அவர் காட்சி அளித்தார்" என்பதின் மூலம் அவர் பகன்ற உயிருள்ள சாட்சியத்திற்கு திருஅவையில் திருமுழுக்கு பெற்ற நமக்கும் பணி உண்டு, கடமை உண்டு என்பதை உணர்த்துவதை அறிய முடிகிறது.

நமது அன்றாட வாழ்வில் சாட்சியம் கூறவேண்டும் என்பதற்கொப்ப அன்பு,நீதி, நேர்மை, இரக்கம் போன்ற பண்புகளை கொள்கைகளை கடைபிடிப்பதன் மூலம் கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகரப்படுகிறது என்பதை விளக்குகிறது இவ்வாசகம்.

அடுத்து, இரண்டாம் வாசகத்தில் இவ்வுலக ஊனியல்பின் ஆசாபாசாங்கள், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, கட்சி மனப்பான்மை ஆகிய தீய சக்திகளோடு போராடிய இயேசுவின் உயிர்ப்பு நாமும் போராடித்தான், சிலுவையை சுமந்துதான் வெள்ளிபெற முடியும் எனவும் "மேலுலகில் உள்ளவற்றை நாடுங்கள்" என விவரிப்பதையும் ஏற்றுக்கொள்வோம்.

நற்செய்தியில், வெற்றுக் கல்லறையைக் கண்டு அதிர்ச்சி அடைகின்றனர் சீடர்கள். ஆயினும் வெற்றுக் கல்லறையின் மறைபொருள் உண்மையை அறிந்து, புரிந்துக்கொள்கின்றனர். இயேசு கூறின உயிருள்ள வார்த்தைகளை நினைவுப்படுத்தி புத்துயிர் பெறுகின்றனர், பலம் பெறுகின்றனர். அதன்பலாக, உயிர்த்த இயேசுவுக்கு சாட்சியம் பகர துணிகின்றனர்.

இயேசுவின் உயிர்ப்பு நாமும் ஒருநாள் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையைத் தருகின்றது என்றால் அது மிகையாகாது. "இறுதிநாள் உயிர்த்தெழுதலின்போது அவனும் (லாசரும்) உயிர்த்தெழுவான்" என்று சொன்ன மார்த்தாவுக்குப் பதிலளிக்கும் இயேசு, "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" என்பார். (யோவா 11: 24-25) இயேசு கூறும் இவ்வார்த்தைகள், யாரொரெல்லாம் அவர்மீது நம்பிக்கை கொண்டு வாழ்கின்றார்களோ அவர்கள் இறந்தபின்னும் வாழ்வார்கள் என்பதை எடுத்துச் சொல்கின்றது. ஆகவே, இயேசுவைப் போன்று நாமும் ஒரு நாள் உயிர்த்தெழ அவர்மீது நம்பிக்கை வைத்து வாழ்வது தேவையான ஒன்று.

எனவே, இன்றைய வாசகங்கள் நம்முடைய அன்றாட நிகழ்வுகளோடு ஒன்றித்து பார்ப்பது சாலப்பொருத்தமாகும். அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொண்டு சந்தித்த துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், வெறுமை உணர்வுகள் போன்றவைகளை சந்திக்கும் நாள்களில் உயிர்த்த இயேசுவை நாடி தேடி செல்லும் , மனப்பக்குவம் பெறவும், மனவலிமை பெறவும் உயிர்த்த இயேசுவில் சரணடைவோம். சாட்சியம் பகறுவோம்.

*ஆ.வி.டேவிட்..*

**பாஸ்கா ஞாயிறு**
திப. 10: 34a, 37-43
திபா 118:1-2. 16-17.22-23
கொலோ. 3: 1-4
யோவான் 20: 1-9
**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : பாஸ்கா ஞாயிறு**